1980 ஜூலை 23]

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலேயே காய்கறி கூட்டுறவுச் சங்கம் இது ஒன்றுதான். ஆகவே, இன்னும் அதிகமான காய்கறிகளை கொண்டு செல்லும் பொருட்டு வேன் வழங்க ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காய்கறிகளே அந்த அளவுக்கு இல்லை என்னும்போது வேன் எதற்கு ?

(பதில் இல்லை)

சாத்தனூர் அணையின் மேல் மட்டக்கால்வாய் வெட்டும் திட்டம்.

வினா எண் 40—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணையின் மேல் மட்டக்கால்வாய் புதியதாக வெட்டுவது பற்றி ஆய்வு ஏதும் செய்யப்பட்டதா ?

(ஆ) அப்பணி எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் பற்றி பூர்வாங்க ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. அதன் மீது திட்ட மதிப்பீடு, அறிக்கை முதலியன தயாரிக்க தலைமைப் பொறியாளர் அனுமதி கோரியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இத்திட்டத்தின் மதிப்பீடு செய்து அறிக்கை அளிக்க தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எப்பொழுது அந்த வேலை துவங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னி ஆற்றின் மீது கட்டப்பெற்றிருக்கிற சாத்தனூர் அணையிலிருந்து 750 கன அடி உபரி நீரை 5,250 ஏக்கர் புஞ்சை நிலத்திற்கு பாசன வசதி கொடுக்கவும், 1,920 ஏக்கர் நஞ்சை நிலங்களுக்கு பாசனத்தை உறுதி செய்யவும், 411 ஏக்கர் புஞ்சை நிலத்திற்கு பற்றாக் குறையை போக்கவும் வாய்ப்பு இருப்பதாக தலைமைப் பொறியாளர் அறிக்கை கொடுத்திருக்கிறார். ஆனால் பொன்னி ஆற்றின் மேல் பகுதியில் தர்மபுரி மாவட்டத்தில் ஒரு அணை கட்ட வேண்டிய சூழ்நிலையும் இருப்பதால், உபரி நீர் எவ்வளவு கிடைக்கும் என்று ஆய்வு நடத்தச் சொல்லி ஆணையிடப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வின் அறிக்கை வந்ததற்குப் பிறகு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பெறும்.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, பெருமழை காலங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு மட்டுமல்லாமல், சாதாரணமாகவே அங்கே அதிகப்படியாக இருக்கும் தண்ணீரை பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இத்திட்டத்தை ஆய்வில் எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வு அரசுக்கும் புரிகிறது. அரசுக்கும் இருக்கிறது. உபரி நீரை வீணாக்காததோடு பெருமழை காலங்களில் அதிகமாக வருகிற வெள்ளத்தை தடுப்பதற்கும் அந்த நீரை உபயோகமாக பாசன வசதிகளுக்குப் பயன்படுத்த வேண்டும் என்கிற உணர்வு அரசுக்கும் இருக்கிறது. எனவே உபரி நீர் எவ்வளவு கிடைக்கும் என்கிற ஆய்வு வந்ததற்குப் பிறகு இதிலே தேவையான நடவடிக்கை திட்டத்தை மேற்கொள்ள வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக சாத்தனூர் அணையின் மேல் மட்டக் கால்வாய் வெட்டுவது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு எவ்வளவு பணம் தேவைப்படுகிறது? அதற்காக எவ்வளவு நாட்களிலே முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, 4,70,000 ரூபாய் செலவு ஆகும் என்று தலைமைப் பொறியாளர் தம் அறிக்கையிலே கூறியுள்ளார். உபரி நீர் ஆய்வு பற்றிய அறிக்கை வந்ததற்குப் பிறகு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்வாய் மூலமாகத்தான் திருவண்ணாமலை சமுத்திர ஏரி போன்ற இடங்களுக்கு தண்ணீர் போகவிருக்கின்றது. திருவண்ணாமலை, இந்துக்கள் வரக்கூடிய ஒரு பெரிய ஸ்தலம். அங்கே சில விழா நாட்களில் கூட்டம் தாங்க முடியவில்லை. பக்தர்கள் அதிகமாக வரக்கூடிய பகுதியாக இருப்பதினாலும், அவர்களுக்கு தண்ணீர் வசதிக்கு அங்கே ஒரு ஆறு இல்லாத நிலை இருப்பதினாலும், இந்தத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று பரிசிலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படுகிற சூழ்நிலையே எழுந்தது. ஆகையினால் அமைச்சர் அவர்கள் இதற்கு முதலிடம் அளித்து, உடனடியாக இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தேவையானவற்றைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1980 ஜூலை 23]

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இந்தத் திட்டம் எடுத்துக் கொள்வதற்குத் தகுதியானது என்று தலைமைப் பொறியாளர் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். எனவே எடுத்துக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. விரைவில் எடுத்துச் செயல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

டாக்டர் கே. சமரசம் : பெண்ணையாற்றின் குறுக்கே தர்மபுரி மாவட்டத்தில் ஒரு அணை கட்ட உத்தேசித்து மூன்று இடங்களில் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. அதில் அரசாங்கம் எந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறது? எவ்வளவு தொகையில் அதைக் கட்ட உத்தேசித்திருக்கிறது என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மூன்று இடத்தில் எது சரியான இடமோ அந்த இடத்தில் அணை கட்டப்படும்.

கன்னியாகுமரி-சென்னை கடற்கரை சாலை.

வினா எண் 39.—திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி-சென்னை கடற்கரையை ஒட்டிய தேசிய நெடுஞ்சாலை போடும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கன்னியாகுமரி-சென்னை கடற்கரையை ஒட்டிய சாலை போடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. ஆர். சுந்தரம்: எப்போது அந்த வேலை எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கிழக்குக் கடற்கரைச்சாலை ஒரு பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த சாலை. போர்க் காலங்களில் கடல் மார்க்கமாக வரும் தாக்குதலை முறியடிப்பதற்காக இந்தச் சாலை பெரிதும் உதவும் என்ற காரணத்தால் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மத்திய அரசின் உதவி கிடைத்தவுடன் உடனடியாக எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்த கன்னியாகுமரி-சென்னை கடற்கரை சாலை போர் முக்கியத்துவம் வாய்ந்த சாலை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டம் பற்றி நீண்ட நாட்களாகப் பேசப்பட்டு